**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டை.**

**முன்னிலை: செல்வி. D.பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, புதுக்கோட்டை.**

**2025–ம் ஆண்டு ஏப்ரல் 09–ம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056 குரோதி வருடம் பங்குனி திங்கள் 26–ம் நாள்**

**அசல் வழக்கு எண். 147/2017**

*(CNR No.TNPD040002132017)*

சின்னம்மாள் ... வாதி

–Vs–

1. தமிழக அரசுக்காக
   மாவட்ட ஆட்சித் தலைவர்,
   புதுக்கோட்டை.

2. நகராட்சி ஆணையர்,
   புதுக்கோட்டை. .... பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.நாகமுத்து, அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.வெங்கடேசன், அவர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பில் எழுத்து பூர்வ விவாதவுரை தாக்கல் செய்யப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்கள் நன்கு பரிசீலித்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் சீரான ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஊழியர்களோ, அவர்வகை பணியாளர்களோ அல்லது ஏஜெண்டுகளோ எந்தவிதத்திலும் இடைஞ்சல்

செய்யாவண்ணம் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:-

(2.1) தாவாச் சொத்தில் கடந்த 60 வருடங்களுக்கு முன் வாதியின் தாயாரான பஞ்சவர்ணம் என்பவர் கூரை வீடு கட்டி அனுபவ, பாத்தியத்திலிருந்து வந்து பின்னிட்டு வாதியின் தாயாரின் மறைவிற்கு பிறகு தாவாச் சொத்தில் வாதி மேற்படி கூரை வீட்டை பழுது பார்த்து தொடர்ந்து சட்டகாலத்திற்கும் மேலாக தன் குடும்பத்துடன் வசித்து வந்து மேற்படி கூரை வீட்டிற்கு ஒட்டினார்போல் மேல்புறத்தில் கடந்த 2006-ம் வருடத்தில்ர ஒரு ஓட்டுவீடு கட்டி வசித்து தொடர்ந்து அனுபவ, பாத்தியத்தில் இருந்து வருகிறார்.

(2.2) இந்நிலையில் தாவாச் சொத்தில் வாதி வசித்து வருவதை உறுதி செய்து புதுக்கோட்டை நில அளவை துறை மற்றும் பதிவேடுகள் சுற்றுக்குழு துணை ஆய்வாளரால் வாதி பெயருக்கு தாவா சொத்தைப் பொறுத்து 9(2) நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு அதனை உறுதி செய்யும் விதமாக கடந்த 10.12.2012-ம் தேதியன்று தாவாச் சொத்தை பொறுத்து வாதியின் பெயருக்கு புதுக்கோட்டை நகர நத்தம் நிலவரித் திட்ட தனி வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக வருவாய் கணக்குகளில் வாதியின் பெயருக்கு பதிவுகள் ஏற்படுத்தப்பட்டு தாவாச் சொத்தும் வாதியின் தொடர் அனுபவ, பாத்தியத்தில் இருந்து வருகிறது.

(2.3) தாவாச் சொத்தில் வாதியால் கட்டப்பட்டுள்ள கூரை வீட்டிற்க வாதியின் கணவரான செல்வராஜ் பெயரில் 2-ம் பிரதிவாதி அலுவலகத்தில் சொத்துவரி நாளது தேதிவரை தொடர்ந்து செலுத்தியும், தாவா வீட்டிற்கு வாதி பெயரில் மின் இணைப்பு பெற்று மின் கட்டணம் செலுத்தியும் வருகிறார். தாவாச்

சொத்தில் வாதி வீடு கட்டி வசித்து வருவதற்கு புதுக்கோட்டை நகர நத்தம் நிலவரித்திட்ட தனி வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டுள்ள போதும் மேற்படி பட்டா இடத்திற்கு சேகரமாக மேற்குபுறம் வாதியின் தனித்த பாத்தியத்திலும், அனுபவத்திலும் நாளது தேதிவரை இருந்து வந்து மேற்படி பட்டாவிற்குள் கட்டுப்படாத வாதியின் அனுபவத்தில் இருந்து வரும் இடத்தில் வாதி ஓட்டுவீடு, கட்டி மரங்கள் வளர்த்தும், வீட்டின் பயன்பாட்டிற்கான விறகுகள் போட்டும் பிறத்தியார் குறுக்கீடு இன்றி தாவாச் சொத்தில் வாதி தன் தனித்த அனுபவ பாத்தியத்திலிருந்து வருகிறார்.

(2.4) இந்நிலையில் சட்டகாலத்திற்கும் மேலாக வாதியின் தொடர் அனுபவ, பாத்தியத்தில் இருந்து வரும் தாவாச் சொத்தில் கடந்த 20.05.2017–ம் தேதியன்று 2–ம் பிரதிவாதி மற்றும் 2–ம் பிரதிவாதி அலுவலக பணியாளர்கள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி தாவாச் சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து தாவாச் சொத்தில் வாதி விறகுகள் போட்டு அனுபவிப்பதை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் இல்லையென்றால் தாவாச் சொத்தில் வாதியால் விறகுகள் போட்டு அனுபவித்து வருவதை அப்புறப்படுத்தி விடுவதாகவும், மேலும் தாவாச் சொத்தில் வாதியால் வளர்க்கப்பட்டுள்ள மரங்களை வெட்டபோவதாகவும் மிரட்டி அத்துமீறல் செய்துள்ளனர். இருந்தபோதும் வாதி பெரும் போராட்டத்திற்கு இடையே 2–ம் பிரதிவாதியின் அத்துமீறலை ஒருவாறாக தடுத்துவிட்டார். இருப்பினும் தாவாச் சொத்தில் 2–ம் பிரதிவாதியின் அத்துமீறல் தொடர்ந்த வண்ணம் உள்ளது. எனவே தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஊழியர்களோ, அவர்வகை பணியாளர்களோ அல்லது ஏஜெண்டுகளோ எந்தவிதத்திலும் இடைஞ்சல் செய்யாவண்ணம் நிரந்தர தடையாணை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 2–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1–ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

(3.1) வாதியின் வழக்கு சுத்தப் பொய், வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்புடையதல்ல எனக் கண்டு எடுத்த எடுப்பிலேயே தள்ளபடி செய்யத்தக்கதாகும். இதனடியில் வெளிப்படையாய் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளை தவிர ஏனையவற்றை மறுக்கின்றபடியால் அவற்றை வாதியே கண்டிப்பாய் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதியின் வழக்குரை பத்தி 4, 5–ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். நத்தம் நிலவரித் திட்ட ஆவணங்களின்படியும் பூஸ்திதியில் உள்ள அனுபவபடியும், நத்தம் நகரளவை எண்.1928/17–ன்படி 0.0040.0 சதுர மீட்டர் பரப்பளவில் வாதி சின்னம்மாள், பெயரிலும் பதிவாகியுள்ளது. இதன் கீழ்புறம் நகரளவை எண்.1928/18–ன்படி 0.0052.0 சதுர மீட்டர் பரப்பளவில் ராஜகோபால் மனைவி காளியம்மாள் என்பவர் பெயரிலும் பட்டா பதிவாகியுள்ளது. தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ள வாதி ஸ்தல நகரளவை எண்.1928/17–ல் கட்டுப்பட்டுள் மனையிடம் 2800 சதுரடி (260 ச.மீ) பரப்பளவு மற்றும் நான்கெல்லைப்படியும் தனி வட்டாட்சியரால் பட்டா வழங்கப்படவும் இல்லை, அனுபவமும் இல்லை என்பது ஸ்தல ஆய்வின் போது தெரிய வருகிறது. தாவாச் சொத்திற்கு நகராட்சியால் விதிக்கப்படும் சொத்து வரியானது மேற்கூரை வரி மட்டுமே. நிலத்திற்கு உரிமை கோர முடியாது.

(3.2) அசல் வழக்குரை பத்திகள் 5 முதல் 8 இவற்றில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் சரியல்ல. தாவாச் சொத்தில் வாதி வீடு கட்டி வசித்து வருவதற்கு புதுக்கோட்டை நகர நத்தம் நிலவரித் திட்ட வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டுள்ளது போதும் மேற்படி பட்டா இடத்திற்கு சேகரமாக மேற்கு புறம் வாதியின் தனித்த பாத்தியத்திலும், அனுபவத்திலும் நாளது தேதி

வரை பட்டாவிற்கு கட்டுப்படாத இடத்திலும் ஓட்டு வீடு கட்டி, மரங்கள் வளர்த்தும் விறகுகள் போட்டும் பிறத்தியார் குறுக்கீடுமின்றி தாவாச் சொத்தில் தனித்த அனுபவம், பாத்தியத்திலும் இருந்து வருகிறார் என்பது முற்றிலும் பொய்யானதாகும்.

(3.3) பிரதிவாதி ஆணையரிடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 6–வது வார்டு, கம்மாளர் தெரு, நேரு வீதி, திருக்கோகர்ணத்தில் வசிக்கும் பொதுமக்களிடம் பெறப்பட்ட புகார் மனுவில் சுமார் ஐம்பது குடும்பங்கள் வசித்து வரும் மக்கள் 50 வருடங்களாக உபயோகப்படுத்தும் பொதுப் பாதையை இந்த வாதி சின்னம்மாள், செல்வராஜ் என்பவர்கள் ஆக்கிரமித்து அடைத்து அராஜகம் செய்து வருகின்றனர் எனவும், பாதையை மீட்டுத் தருமாறும் குறிப்பிட்டிருந்தது. புகார் மனுவில் அடிப்படையில் ஸ்தலப் பார்வை ஆய்வு செய்து நகர சார் ஆய்வாளர் (நில அளவை) புதுக்கோட்டை நகராட்சி ஸ்தல ஆய்வு அறிக்கை சமர்த்துள்ளார். அந்த இடம் பார்வையில் முடிவில் நத்தம் நிலவரி திட்டம் ஆவணங்களின்படியும், பூமியில் உள்ள அனுபவப்படியும் (நத்தம்) நகரளவை எண்கள் 1928/17–ன்படி 0.004.0 ச.மீ பரப்பளவில் இந்த வாதி சின்னம்மாள் க/பெ.செல்வராஜ் பெயரிலும் பட்டா பதிவாகியுள்ளது. இதன் கீழ் புறமாக நகரளவை எண்.1928/18–ன்படி 0.0052.0 சதுர மீட்டர் பரப்பளவில் ராஜகோபால் மனைவி காளியம்மாள் என்பவர் பெயரிலும் பட்டா பதிவாகியுள்ளது. இந்த உட்பிரிவுகளின் தென்புறம் காலியிட நத்தமாக உள்ளது.

(3.4) மேற்படி நகரளவை எண்.1928/17 மற்றும் 1928/18 ஆகியவற்றிற்கு தென்வடல் தார்ச் சாலையிலிருந்து மேற்கிலிருந்து கிழக்காக பாதை தொடங்கி மேற்குறிப்பிட்ட உட்பிரிவு 1928/17–ன் மேற்புறமாக சென்று திரும்பி கிழக்கு மேற்காக உட்பிரிவு 1928/17 மற்றும் 18–ன் வடக்கு புறமாக

தொடர்ந்து சென்று கோனார் கொல்லைக்க செல்கிறது. மேற்படி பாதையானது நத்தம் நிலவரித் திட்ட கணக்குகளின்படி அரசு புறம்போக்கு (நத்தம்) காலியிடம் வகைப்பாட்டில் 1928/09 என பதிவாகியுள்ளது. மேற்படி வாதி மனைக்கு கீழ்புறம் உள்ள வீடுகளுக்கு செல்லும் பாதையை கருவேல் முட்கள் மற்றும் கல்கால்களை ஊன்றி பாதையை அடைத்து ஆக்ரமணம் செய்துள்ளார். எனவே பொதுமக்கள் பயன்படுத்தி வந்த நிலுவையில் உள்ள அரசு புறம்போக்கு நத்தம் காலியிடம் 1928/109 பாதையை ஆக்ரமணம் செய்து அடைப்பதற்கு வாதிக்கு எந்தவித உரிமையும் அறவேயில்லை. இந்த பிரதிவாதியின் பணியாளர்கள் 20.05.2017–ல் அத்துமீறி நுழைந்து வாதியின் அமைதியான அனுபவத்தை தடைச் செய்ததாக சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் தவறு. எனவே வாதியின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

**<u>4. எழுவினாக்கள்:–</u>**

வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் கீழ்கண்ட எழுவினாக்கள் 04.04.2018–ம் தேதியில் வனையப்பட்டது.

1. வழக்கு தொடரப்பட்ட நாளில் வாதி வழக்குச் சொத்தின் அனுபவத்தில் இருந்தாரா?
2. பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையாணை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. இதர பரிகாரங்கள் என்ன?

5. வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 வரை விசாரிக்கப்பட்டும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் சாட்சியங்கள் இல்லை என்று மேலெழுத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்து பூர்வ விவாதவுரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. எழுவினாக்கள் 1 மற்றும் 2:**

வாதி வழக்கு சொத்தில் வாதியின் தாய் 60 வருடங்களாக கூரை வீடு கட்டி அனுபவித்து வந்ததாகவும், பின்னர் மேற்படி கூரை வீட்டிற்கு மேல்புறத்தில் 2006–ம் வருடத்தில் வாதி ஓட்டு வீடு கட்டி அனுபவித்து வந்ததாகவும், வாதி கூரை வீடு கட்டி அனுபவித்து வந்த பகுதிக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பட்டா இடத்திற்கு சேகரமாக மேற்குபுறம் பட்டாவிற்கும் கட்டுப்படாத இடத்தில் வாதி ஓட்டு வீடு கட்டி மரங்கள் வளர்த்தும், விறகுகள் போட்டு அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். 2–ம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் வாதிக்கு நத்தம் புல எண்.1928/17–ல் 40 ச.மீட்டருக்கு மட்டுமே பட்டா கொடுக்கப்பட்டது என்றும், வாதி கோருவது போல் 2800 சதுரடி (260 ச.மீ)–க்கு பட்டா வழங்கப்படவில்லை என்றும், வாதி அவருக்கு பட்டா வழங்கப்பட்ட இடத்துக்கு மேற்கேயுள்ள நகர புல எண்.1928/109–ல் கண்ட பாதையை ஆக்கிரமித்து கருவேல் முட்கள் மற்றும் கல்கால்களை ஊன்றி பாதையை அடைத்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

8. வாதியின் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தை ஆராய்கையில் வாதி புல எண்.1928/17–ல் கட்டுப்பட்ட நத்தம் மனை இடம் மற்றும் மேற்படி மனை இடத்திற்கு சேகரமாக உள்ள ஓட்டு வீடு, விறகுகள் மற்றும் மரங்கள் வளர்த்து அனுபவித்து வரப்படும் புழக்கஸ்தலம் உட்பட

மொத்தம் 2800 சதுரடி என்று குறிப்பிட்டுள்ளார். வாதியின் வழக்குரையில் மேற்படி புல எண்.1928/17−ன் பரப்பளவு எவ்வளவு, 1928/17−க்கு உட்பட்ட இடம் போக மீதியுள்ள இடம் எந்த புல எண்ணுக்கு உட்பட்டது என்பது போன்ற எந்த விவரங்களும் இல்லை. வாதி புல எண்.1928/17−ன் பரப்பளவை குறிப்பிடவில்லை என்ற போதிலும் வா.சா.ஆ.4 மனை வரி தோராய பட்டாவை பார்க்கையில் வாதிக்கு புல எண்.1928/17−ல் 40 சதுர மீட்டருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. வாதி பாதையை ஆக்கிரமித்ததாக சொல்லப்படுவதை மறுக்கின்ற போதிலும், வழக்குரையின் சொத்து விவரத்தில் மேற்கு நான்கெல்லையாக சுடுகாட்டிற்கு செல்லும் தென்வடல் 20 அடி ரோடு காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.7 புல படத்தின்படி நகர புல எண்.1928/17−க்கு மேற்கே நகர புல எண்.1928/109 அமைந்துள்ளது தெளிவாகிறது. மேலும் வா.சா.2−ம் அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பத்தி 2−ல் வாதி வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் சாலை செல்கிறது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். எனவே பிரதிவாதிகள் தரப்பில் நகர புல எண்.1928/109 என்னவாக வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு எந்த சாட்சியமளிக்கப்படவில்லை என்ற போதிலும் வாதியின் வழக்குரை மற்றும் சாட்சியங்களிலிருந்தே வாதியின் சொத்திற்கு மேற்கே சாலை அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் புல எண்.1928/17−க்கு வழங்கப்பட்ட வா.சா.ஆ.4 பட்டாவை தாக்கல் செய்துள்ள வாதி அதற்கு மேற்கே அமைந்துள்ள புல எண்.1928/109−ற்கு அவர் பெயரில் பட்டாவோ, தோராய பட்டாவோ அல்லது வேறு எந்த வருவாய் ஆவணங்களையோ அவரது அனுபவத்தை நிரூபிக்கும் விதமாக சமர்ப்பிக்கவில்லை.

9. மேலும், வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சொத்து வரி கேட்பு அறிவிப்புகள், புல எண்.1928/17−க்கு மேற்கே புல எண்.1928/109−ல் வாதி

கட்டியுள்ளதாக சொல்லப்படும் வீடு அமைந்துள்ள இடத்திற்கானது தான் என்பதை நிரூபிக்கும் விதமாக மேற்படி அறிவிப்புகளில் நகர புல எண் எதுவும் இல்லை. மேலும் வாதியும் அவரது வழக்குரையில் அவருடைய கூரை வீட்டின் கதவு எண் என்ன என்பதையும், ஓட்டு வீட்டின் கதவு எண் என்ன என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. அதேபோல் வா.சா.ஆ.5 சொத்து வரி ரசீதுகளிலும் அவை புல எண்.1928/17–க்கு மேற்கேயுள்ள 1928/109–க்கானது என்று காண்பிக்க அதில் புல எண்கள் இல்லை. அதேபோல் வா.சா.ஆ.6 மின் கட்டண ரசீதுகளிலும் புல எண்ணோ கதவு எண்ணோ குறிப்பிடவில்லை. எனவே வாதி அவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள நகர புல எண்.1928/17–க்கு மேற்கேயுள்ள புல எண்.1928/109–லும் அனுபவத்தில் இருந்தார் என்பதை நிரூபிக்கும் விதமாக எந்த சாட்சியங்களும் இல்லை. மேலும் வா.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 1–ல் அவருடைய சொத்திற்கு கீழ்புறமுள்ள இடத்திற்கு தன் மாமியார் காளியம்மாள் பெயரில் நகர புல எண்.1928/18–க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். அதேபோல் வா.சா.ஆ.7 புலப்படத்திலும் புல எண்.1928/17–க்கு கிழக்கே புல எண்.1928/18 தான் உள்ளது. ஆனால் வாதி அவரது வழக்குரை சொத்து விவரத்தில் கிழக்கே ஆறுமுகத்திற்கு சொந்தமான வீடுகள் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே வாதி புல எண்.1928/17–க்கு அப்பாற்பட்டு வழக்கு சொத்துக்குள் அடங்கியுள்ள இதர இடங்களை தெளிவாக அடையாளம் கண்டு சொத்து விவரம் குறிப்பிட தவறியுள்ளார். மேலும் மேற்படி இடங்களின் நகர புல எண், நான்கெல்லை முதலிய விவரங்களையும் தெளிவாக குறிப்பிடவில்லை. மேலும் புல எண்.1928/17–க்கு மேற்கே உள்ள இடத்தில் வாதி அனுபவத்தில் உள்ளார் என்பதை நிரூபிக்கும் விதமாகவும் வாதி தரப்பில் எந்தவித சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே வாதி வழக்கு சொத்தின் மீதான அவரது

அனுபவத்தை நிரூபிக்க தவறியுள்ளார் என்று தீர்வு காணப்படுகிறது. எனவே வாதிக்கு அவர் கோரியுள்ள நிரந்தர தடையாணை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்வு காணப்படுகிறது. இவ்வாறாக எழுவினாக்கள் 1 மற்றும் 2 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

<u>10. எழுவினா 3:–</u>

எழுவினாக்கள் 1 மற்றும் 2 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்வு காணப்படுகிறது.

**11. முடிவாக, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 2025–ம் வருடம் ஏப்ரல் மாதம் 09–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2025.04.09 16:14:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணப்பட்டியல் :–</u>

<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>

வா.சா.1 – சின்னம்மாள்
வா.சா.2 – அன்புமணவாளன்
வா.சா.3 – நிரஞ்சணாதேவி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | ---- | தாவாச் சொத்தை பொறுத்து 2-ம் பிரதிவாதி அலுவலகத்தால் வாதிக்கு கொடுக்கப்பட்ட சொத்து வரி, புதிய வரி விதிப்பு அல்லது திருத்தத்தை குறித்த விசேஷ நோட்டீஸ் | அசல் |
| வா.சா.ஆ.2 | --- | 2007-2008 தாவாச் சொத்தை பொறுத்து 2-ம் பிரதிவாதி அலுவலகத்தால் வாதியின் கணவருக்கு கொடுக்கப்பட்ட சொத்து வரி கேட்பு அறிவிப்பு | அசல் |
| வா.சா.ஆ.3 | ---- | 2011-2012 தாவாச் சொத்தை பொறுத்து 2-ம் பிரதிவாதி அலுவலகத்தால் வாதியின் கணவருக்கு கொடுக்கப்பட்ட சொத்து வரி கேட்பு அறிவிப்பு | அசல் |
| வா.சா.ஆ.4 | 10.12.2012 | தாவாச் சொத்தை பொறுத்து வாதியின் பெயருக்கு புதுக்கோட்டை நகர நத்தம் நிலவரித் திட்ட தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா | அசல் |
| வா.சா.ஆ.5 | --- | தாவா சொத்திற்கு வாதியின் கணவர் பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை 12) | அசல் |
| வா.சா.ஆ.6 | --- | தாவா சொத்தில் உள்ள கூரை வீட்டில் மின் இணைப்பிற்கு வாதியின் கணவர் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 10) | அசல் |
| வா.சா.ஆ.7 | 26.05.2016 | தாவா சொத்திற்கு நகர நிலவரித் திட்ட தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வரைபடம் | உண்மை நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை.

POORNIMA
Digitally signed by POORNIMA
Date: 2025.04.09 16:15:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
புதுக்கோட்டை.